2002 அக்டோபர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 11, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

11—

குளிரூட்டல் கிடங்கு

***11054—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பழ வகைகள், காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை இருப்பு வைக்க குளிரூட்டும் கிடங்குகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி வட்டாரத்தில் அதிகப்படியாக திராட்சை மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. அவ்வாறு சாகுபடி செய்யப்படும் திராட்சையை விவசாயிகள் நேரிடையாக எடுத்துச் சென்று ஓசூர் மற்றும் பெங்களூரில் உடனுக்குடன் விற்பனை செய்துவிடுவதால், அங்கு குளிர்ப்பதன கிடங்கு அமைக்கும் அவசியம் ஏற்பட வாய்ப்பு மிக மிகக் குறைவு என்பதால், நாட்ராம்பள்ளி தொகுதியில் குளிர்ப்பதனக் கிடங்கு அமைத்திட சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாட்ராம்பள்ளி சட்டப் பேரவைத் தொகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். இது கிணற்றுப் பாசனத்தை நம்பி வாழ்ந்து வரும் ஏழை விவசாயிகளைக் கொண்டதாகும். விவசாயிகள் பயிரிடும் கீரை வகைகளையும், காய்கறி வகைகளையும், பழ வகைகளையும், கொய்யா, மா, சப்போட்டா, சீத்தாப்பழம் போன்றவற்றையும் அன்றாடம் அறுவடை செய்து, உடனுக்குடன் மார்க்கெட்டுக்கு கொண்டு செல்ல இயலுவதில்லை. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, இடைத் தரகர்கள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கி, அதிக இலாபம் சம்பாதித்து*

வருகிறார்கள். ஆகவே, ஏழை விவசாயிகளுக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் குளிரூட்டும் கிடங்கு ஒன்று கட்டிக் கொடுத்தால், கீரை வகைகளையும், பழ வகைகளையும், காய்கறி வகைகளையும், இருப்பில் வைத்து, அதிக விலைக்கு விற்று இலாபம் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த நிதியாண்டிலாவது கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி வட்டாரத்தைப் பொறுத்தமட்டில் அதிகப்படியாக திராட்சை மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் கணக்கெடுத்தபடி அங்கே 20 முதல் 25 எக்டேர் வரை திராட்சை மற்றும் பழ வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஒரு எக்டேருக்கு 25 டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்தத்தில் 500 முதல் 600 மெட்ரிக் டன் வரை திராட்சை மற்றும் பழ வகைகள் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்படி உற்பத்தி செய்யப்படுகிற அந்தப் பழ வகைகளை பக்கத்திலே இருக்கிற ஓசூர், பெங்களூர் போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று விவசாயிகள் உடனடியாக விற்று விடுகிறார்கள். ஆகவே, அங்கு குளிர்ப்பதன வசதி செய்து கொடுப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பது மட்டுமல்ல, தனியார் யாராவது முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்து தரப்படும் என்பதையும் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் விளைபொருட்களைப் பாதுகாக்கின்ற இந்தக் குளிரூட்டும் கிடங்குகள் தமிழகத்தில் அரசின் மூலம் இதுவரை எத்தனை கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? மேலும் இந்த ஆண்டு கட்டுவதற்கு ஏதாவது நிதி ஒதுக்கியிருக்கின்றீர்களா? அவ்வாறு ஒதுக்கியிருந்தால் என்னுடைய இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவல்கிணறு விலக்கில் பெருந்தலைவர் காமராஜர் காய்கறி மார்க்கெட் இருக்கிறது. அங்கிருந்து மிக அதிகமாக காய்கறிகளும், பூக்களும் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் அதேபோன்று கேரளாவில் திருவனந்தபுரம் போன்ற பகுதிகளுக்கு செல்கின்றன. எனவே, அந்தப் பகுதியிலே அரசு குளிரூட்டும் கிடங்கு,

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2002 அக்டோபர் 25]

விவசாயிகளின் நலன் கருதி கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 9 இடங்களில் குளிர்ப்பதனக் கிடங்குகள் அமைப்பதற்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய பகுதிக்கு அவசியம் என்று சொன்னால் தனியார் மூலமாகக் கட்டிக் கொடுப்பதற்குத் தேவையான உதவிகள் செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்.

12—

இலவச வீட்டுமனைப் பட்டா

***19062—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட தெங்கரை, பத்மநாபபுரம், மிடாலம், கேரளபுரம், கல்லுவிளை ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்திட நிதியுதவி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவான நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தெங்கரை, பத்மநாபபுரம், கேரளபுரம் மற்றும் கல்லுவிளை பகுதிகளில் இலவச வீட்டுமனை கோரி விண்ணப்பித்துள்ளோர் மனுக்கள் எதுவும் நிலுவையில் இல்லை. எனவே,